

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 27 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 20 – ஞாயிற்றுக்கிழமை 06 செப்டம்பர் 2026 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 27 : Thiruvalluvar Year - 2057 - Aavani 20 - Sunday 06 September 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


### கழகமும் – கே.என்.நேருவும் புதிய அரசின் இத்தகைய

# பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம்!

## லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை குறித்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, செப்.6-**

**கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் மீதான சோதனையை லஞ்ச ஒழிப்புத்துறை மேற்கொண்டு வரும் நிலையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் "கழகமும், கே.என்.நேரு அவர்களும் இத்தகைய புதிய அரசின் பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம்" என்று தமது கண்டனத்தைப் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



**உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது; சட்டமன்றக் கூட்டத்தொடரும் நடந்துகொண்டிருக்கிறது.**

**இந்நிலையில், முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காகவே கழக முதன்மைச் செயலாளர் சகோதரர் கே.என். நேரு அவர்கள் மீதான சோதனை நடவடிக்கையைத் த.வெ.க. அரசு மேற்கொண்டுள்ளது.**

### குதிரை பேரம்: வழக்குப் பதியாதது ஏன்?

**ஆட்சி அமைக்க மற்ற கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்ய வைத்து, சட்டமன்ற வளாகத்திலேயே அவர்களைத் தம்**



**கட்சியில் சேர்த்ததையும் குதிரை பேரம் நடத்தியதையும், அது தொடர்பான புகார்களில் லஞ்ச ஒழிப்புத்துறை முதல் தகவல் அறிக்கையைக் கூட பதியாததையும் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவர்.**

**இந்திய ஜனநாயகத்தின் இருண்ட பக்கமாய் இந்தப் போக்கு தொடரும் நிலையில் வழக்கம்போல் திசைதிருப்பும் நடவடிக்கையைக் கையில் எடுத்துள்ளது இந்த ரீல்ஸ் அரசு.**

**கே.என்.நேரு அவர்களும், கழகமும் புதிய அரசின் இத்தகைய பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம். சட்டத்தின் வழியில் அனைத்தையும் எதிர்கொண்டு வெல்வோம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### காவல்துறை மானியக் கோரிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அடுக்கிய குற்றச்சாட்டுகளுக்கு

# முதலமைச்சர் விஜய் பதிலளிக்க முடியாமல் ஓட்டம்!

## அப்பா ஆளுநரை ஓடவிட்டார்! மகன் முதலமைச்சரையே ஓடவிட்டுள்ளார்!

## "இந்திய குடியரசு வரலாற்றில் இது புதுசு!" என சமூக வலைதளங்களில் கடும் விமர்சனம்!

**சென்னை, செப்.6-**

**சட்டப்பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 116 நாட்கள் த.வெ.க. ஆட்சியில், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு குறித்து அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் முன்வைத்தார். ஆனால் இந்தக் கேள்விகள் எதற்கும் பதிலளிக்க முடியாத முதலமைச்சர் விஜய், 3 நாட்களுக்குப் பிறகு பதில் அளிப்பதாகக் கூறிவிட்டு, அவையிலிருந்து தெறித்து வெளியேறினார். எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருந்தபோதே, அவையிலிருந்து முதலமைச்சர் விஜய் திடீரென ஓட்டம் பிடித்தார்.**

**இந்நிகழ்வு தொடர்பாக சமூகவலைதளத்தில் பல்வேறு தரப்பினரும் விமர்சனங்களைச் செய்து வருகின்றனர். முந்தைய கால ஆளுநர் விவகாரங்களையும், தற்போதைய சட்டமன்ற நிகழ்வுகளையும் ஒப்பிட்டு சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.**

**அதில், "அப்பா ஆளுநரை ஓட விட்டதும், மகன் மாநில முதல்வரையே ஓட விடறதும், தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு மட்டும் அல்ல, இந்திய குடியரசு வரலாற்றிலேயே புதுசு" எனவும், "இதில் தி.மு.க. மட்டும்தான் Specialist" எனவும் பதிவிட்டு வருகின்றனர். இந்த வாசகங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.**

*சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சியில் ஏற்பட்டுள்ள சட்டம் - ஒழுங்கு மற்றும் எதற்கும் பதில் தராத முதலமைச்சரின் செயல் உள்ளிட்டவைகளைச் சுட்டிக் காட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் ஒருபகுதி வருமாறு:-*

முதலமைச்சருடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய காவல்துறை, இப்படிக் கட்டுப்பாடே இல்லாமல் செயல்பட என்ன காரணம் என்று நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

தலைமைச் செயலாளரும் டி.ஜி.பியும்தான் இதற்கெல்லாம் காரணம் என்று ஆளுங்கட்சியின் கூட்டணிக் கட்சியினரே வெளிப்படையாகச் சொல்கிறார்கள். அப்படியானால்,



இதெல்லாம் முதலமைச்சருக்குத் தெரிந்து நடக்கிறதா, தெரியாமல் நடக்கிறதா என்கின்ற கேள்வியை இந்த அரசுக்கு நாங்கள் வைக்க விரும்புகிறோம்.

ஜனநாயக ரீதியாகக் கருத்துச் சொல்கிறவர்கள், போராடுகிறவர்களைப் பார்த்து இந்த அரசும் காவல்துறையும் பயப்படுவது ஏன்?

### பெரியார் திடலுக்குள் காவல்துறை குவிப்பு!

தந்தை பெரியாரை இந்த ஆளுங்கட்சி கொள்கைத் தலைவர் என்று சொல்கிறார்கள். பெரியார் திடலுக்கே போய் முதலமைச்சர் மரியாதை எல்லாம் செய்தார். ஆனால், 'நீட்' தேர்வு, இ.டபிள்யூ.எஸ். (EWS) பொருளாதார ரீதியான இடஒதுக்கீடு ஆகியவற்றுக்கு எதிராக திராவிடர் கழகம் சார்பில், சமீபத்தில் ஒரு இருசக்கர வாகனப் பேரணியை நடத்த ஏற்பாடு செய்தார்கள். அதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று காவல்துறையினரை இந்த அரசு பெரியார் திடலுக்குள் குவித்தது.

அதன் பிறகு, திராவிடர் கழகம் நீதி மன்றத்திற்குச் சென்று, நீதிமன்ற உத்தரவின் பேரில் அந்த இருசக்கர வாகனப் பேரணியை, இன்றைக்கு நடத்தி முடித்திருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகளையெல்லாம் பார்த்தால், தமிழ்நாடு இதுவரைக்கும் எதிர்கொள்ளாத ஓர் அசாதாரண சூழ்நிலையை இந்த ஆட்சியில் எதிர்கொண்டிருப்பது உறுதியாகிறது.

### முதலமைச்சர் பதில் சொல்லவே இல்லை!

சட்டம் ஒழுங்கு தொடர்பாகக் காவல்துறை சம்பந்தமாக இந்தக் கூட்டத்தொடரில் கடந்த 15 நாட்களில், நான் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறோம். ஆனால், இதுவரைக்கும் எந்தக் கேள்விக்கும் முதலமைச்சர் அவர்கள் எழுந்திருந்து பதில் சொல்லவே இல்லை.

வழக்கமாகத் தொலைக்காட்சித் தொடரில் நடித்துக்கொண்டிருக்கிற ஓர் கலைஞரின் காலம் முடிந்துவிட்டால், அல்லது வேறு தொடருக்குப் போய்விட்டால், தலைப்புச் செய்தியாக மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக 'இவருக்குப் பதிலாக இவர் வருவார்' என்று போட்டுவிடுவார்கள். அதுபோல, இந்த அரசில் எந்தக் கேள்வி கேட்டாலும், வேளாண் துறை அமைச்சருக்குப் பதிலாக விளையாட்டுத் துறை அமைச்சர், சுற்றுச் சூழல்துறை அமைச்சருக்குப் பதிலாக மின்சாரத் துறை அமைச்சர் பதில் சொல்கிறார்கள்.

### இன்னும் நம்புகிறோம்!

முதலமைச்சர் பொறுப்பு வகிக்கின்ற பல துறைகளுக்கும், இங்கு அமைச்சர்கள் ஒவ்வொருவரும் எழுந்திருந்து பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறோம், காவல்துறை இன்னும் முதலமைச்சர் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்றுதான் நான் நம்பி இன்னும் பேசிக் கொண்டிருக்கிறேன்.

கடந்த 116 நாட்களில் சுமார் 550 குற்றச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதில் 200 கொலைகள், 300க்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுமைகள், 8 காவல் மரணங்கள், 10 ஆணவக் கொலைகள் நடந்திருக்கின்றன. ஆட்சிக்கு வந்து ஆறு மாதம்கூட ஆகவில்லை என்று ஆளுங்கட்சியினர் சொல்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வது தேர்தல் வாக்குறுதிகளுக்குப் பொருந்தும், அதை நான் மறுக்கவில்லை. ஆனால், சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரைக்கும் அதைச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது.

ஒரு புதிய ஆட்சி வந்ததுமே குற்றவாளிகளுக்கு ஒரு வலுவான செய்தியை (Strong message) இந்த அரசு கொடுக்க வேண்டும். முதலமைச்சரும் ஆட்சிக்கு வந்த புதிதில் `திறமையான அதிகாரிகளை நான் நியமித்து விட்டேன்' என்று சொன்னார். அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலும் பொது அமைதியை நிலைநிறுத்துவதை இந்த அரசு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், எதனால் இத்தனை குற்றங்கள் நடந்தன என்று நீங்கள் நேர்மையாக ஆராய வேண்டும்.

### கேட்கும் கேள்விகளுக்கு அன்று முதல்வராக உடனுக்குடன் பதில் தந்தார்!

முதலமைச்சருடைய பதிலுரைக்கு இன்னும் மூன்று நாட்கள், காலம் இருக்கிறது. நன்றாகத் தயார் செய்துகொண்டு வாருங்கள்.

ஏற்கனவே தயாராக இருந்தால், இப்போதே பதில் சொல்லட்டும். நாங்கள் கேட்கிறோம். எங்களுக்கு ஏதும் ஆட்சேபணை கிடையாது. அதிகாரிகளிடம் அனைத்துத் தகவல்களையும் கேட்டுவிட்டு வாருங்கள். ஏற்கனவே நாங்கள் சொன்னது போல மீண்டும் எங்கள் மீது பழி போடாமல், இன்னும் தி.மு.க.தான் ஆட்சி செய்கிறது என்பதை உங்கள் மனதிலிருந்து எடுத்துவிடுங்கள். எங்களை நோக்கியே எதிர்க் கேள்வி கேட்காமல், கேட்ட கேள்விகளுக்கு உரிய விளக்கத்தைக் கொடுங்கள்.

> **"கடந்த 116 நாட்களில் சுமார் 550 குற்றச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதில் 200 கொலைகள், 300க்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுமைகள், 8 காவல் மரணங்கள், 10 ஆணவக் கொலைகள் நடந்திருக்கின்றன. ஆட்சிக்கு வந்து ஆறு மாதம்கூட ஆகவில்லை என்று ஆளுங்கட்சியினர் சொல்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வது தேர்தல் வாக்குறுதிகளுக்குப் பொருந்தும், அதை நான் மறுக்கவில்லை. ஆனால், சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரைக்கும் அதைச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது."**

எங்கள் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு தொடர்பான அனைத்துக் கேள்விகளுக்கும் அன்றைய முதலமைச்சர் எங்களுடைய தலைவர் அவர்கள் அவையில் பொறுமையாகவும், பொறுப்பாகவும் தரவுகளோடு, புள்ளிவிவரங்களோடு பதில் கொடுத்திருக்கிறார். எனவே, இப்போது நீங்கள் பதில் சொல்ல வேண்டிய

தொடர்ச்சி 2ஆம் பக்கம்